**இன்றைய வேளாண் செய்திகள்**

## அலங்கார மீன் வளர்ப்புக்கு மூன்று நாள் பயிற்சி

அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பான மூன்று நாள் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.இது குறித்து அந்தக் கல்லூரியின் தலைவர் சுகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையமும் ஹைதராபாதில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு ஆணையமும் இணைந்து ஒரு பயிற்சி திட்டத்தை நடத்தி வருகிறது.

மீனவர்கள், பொது மக்கள், தொழில் முனைவோர் ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சி கொடுத்து, அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதே பயிற்சியின் நோக்கம்.

இதற்கான பயிற்சி வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்த அலங்கார மீன் வளர்ப்புக்கான மூன்று நாள் பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் - மீன்வளக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி - என்ற முகவரிக்கு தெரிவிக்கலாம் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு நாள்களில் சிறுவாணி அணை நிரம்பும்?

கோவை மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி அணை, இன்னும் இரு நாள்களில் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கோவை மாநகராட்சியில் மொத்தமுள்ள 100 வார்டுகளில் 30 வார்டுகளுக்கு சிறுவாணி அணை நீர்தான் வழங்கப்படுகிறது. தென்மேற்குப் பருவமழை தாமதமாகத் துவங்கிய நிலையில் கோவைக்கு குடிநீர்ப் பிரச்னை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சிறுவாணி அணை குகைப் பாதையில் இருக்கும் குடிநீரை கோவைக்கு எடுக்க முடியாதபடி குகைப் பாதையை கேரள அரசு அடைத்தது. இந் நிலையில், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவானது. ஆனால், அதற்குள் அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. சிறுவாணி அணையில் கடல் மட்டத்துக்கு மேல் 878.50

மீட்டர் வரை நீரைத் தேக்க முடியும். இதில், 863.50 மீட்டர் வரையில் தண்ணீர் எடுக்க முடியும். அதாவது, 15 மீட்டர் உயரத்துக்கு அணையில் நீரைத் தேக்கலாம்.

சிறுவாணி அணை நீர்ப் பிடிப்பு பகுதியில் வியாழக்கிழமை காலை நிலவரப்படி 75 மி.மீ. மழை பெய்தது. அடிவாரத்தில் 35 மி.மீ. மழை பெய்தது. அணை நீர்மட்டம் 875.20 மீட்டர். அணை நிரம்ப இன்னும் 3.3 மீட்டர் மட்டும் தேவை. அணைப் பகுதியில் தொடர்ந்து கன மழை பெய்வதால் வரும் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைக்குள் அணை நிரம்பிவிடும் என்று குடிநீர் வடிகால் வாரியத்தினர் எதிர்பார்த்துள்ளனர். அணையில் இருந்து வியாழக்கிழமை 88 எம்.எல்.டி. தண்ணீர் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் ஜூலை 30-இல் துவக்கம்

மதுரை வேளாண்மைக் கல்லூரியில் இளம் அறிவியல் வேளாண்மை படிப்பு (பிஎஸ்சி-வேளாண்மை) முதலாமாண்டு மாணவ, மாணவியருக்கான வகுப்புகள் ஜூலை 30-ஆம் தேதி துவங்குவதாக, கல்லூரி முதல்வர் (பொறுப்பு) சி.சின்னுசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: முதலாமாண்டு கல்வி பயில வரும் மாணவ, மாணவியருக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்லூரிப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டியிருப்பதால், மாணவ, மாணவியருடன் பெற்றோர்களும் கண்டிப்பாக கல்லூரிக்கு வர வேண்டும். முதல் நாளான ஜூலை 30-ஆம் தேதி மாணவ, மாணவியருக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. கல்லூரிப் பேருந்து அன்றைய தினம் காலை 8.45 மணிக்கு மேல் 9 மணிக்குள் பெரியார் பேருந்து நிலையம் அருகிலுள்ள சர்ச் மற்றும் ரயில்வே சந்திப்பு பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் மாணவ, மாணவியரை ஏற்றிக் கொண்டு புறப்படும். இப்பேருந்து மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் எதிரேயும் நின்று, மாணவ, மாணவியரை ஏற்றி வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றொரு பேருந்து ஆரப்பாளையம் பேருந்து நிலையம் முன்பிருந்து காலை 8.45 மணிக்கு மேல் 9 மணிக்குள் புறப்பட்டு கல்லூரி வந்தடையும். பெற்றோர்களும், மாணவ, மாணவியரும் இந்தக் கல்லூரி பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும், எனத் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கு காய்கறியில் உருவம் செதுக்குதல் பயிற்சி

சிவகாசி ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கல் அறிவியல் துறை சார்பில் காய்கறியில் உருவம் செதுக்குதல் பயிற்சி முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு துணை முதல்வர் ஏ. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். துறைத் தலைவர் பி. சீனிவாசன் வரவேற்றார். ஏற்காடு சேவ்ராய்ஸ் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கல்லூரி பேராசிரியர் ஆ. கிருபா, காய்கறியில் பல வகையான உருவம் செதுக்குதல் குறித்த பயிற்சியை அளித்தார். உருவம் செதுக்குவதற்கு எந்த மாதிரியான காய்கறிகளை தேர்வு செய்ய வேண்டும். எந்த மாதிரியான ஆயுதங்களை உபயோகப்படுத்த வேண்டும் என விளக்கிக் கூறினார்.

பூசணிக்காயில் மயில், சிங்கம், சுபாஷ்சந்திரபோஸின் முகம், தர்பூசணியில் ரோஜாப்பூ, குழந்தைகளின் முகம் உள்ளிட்டவைகளை உருவாக்கும் பயிற்சியை மாணவர்களுக்கு அளித்தார். மாணவர் இ. சரண்ரெட்டி நன்றி கூறினார்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல்முறையாக அறிமுகம்: சூரியசக்தியால் இயங்கும் மிளகாய் உலர்களம்

கடலாடியில் முதல்முதலாக மிளகாய் பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக சூரிய சக்தியால் இயங்கும் மிளகாய் உலர்களம் அறிமுகப்படுத்தப்பட்டு, அதனை 90 சதவிகிதம் மானியத்தில் வழங்க தோட்டக் கலைத் துறை முடிவு செய்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விவசாயத்துக்கு அடுத்தபடியாக விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிக்கும் ஒரே பணப்பயிராக விளங்குவது மிளகாய். கடலாடி, கமுதி, முதுகுளத்தூர் பகுதி விவசாயிகளின் நம்பிக்கை பயிராகவும் மிளகாய் இருந்து வந்தாலும், பருவமழை பெய்தால் மட்டுமே கைகொடுத்து வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொருத்தவரை 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே விவசாயிகளுக்கு மிளகாய்ப் பயிர்கள் நல்ல லாபத்தை கொடுத்து வருகின்றன. நன்றாக விளைந்த மிளகாய்களை விவசாயிகள் பாதுகாப்பாக உலர்த்தி காயவைக்க இதுநாள் வரை கண்மாய், ஊருணிக்கரைகளிலும், மணல் திடல்களிலும் சில சமயங்களில் சாலைகளின் நடுவிலும் போட்டு வந்தனர். இவ்வாறு காயப் போடுவதால் மிளகாய்ப் பயிர்கள் தூசி, மணல் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டு, அதன் தன்மையும் குறைந்து வந்தது. இதுதவிர, பகல் முழுவதும் கடும் வெயிலில் நன்றாக காய்ந்துவிடும் மிளகாய்கள், இரவில் பெய்யும் பனியில் முழுவதுமாக அப்படியே மாறி விடுகின்றன. இதனால் எப்போதாவது விளையும் மிளகாய்க்கும் உரிய விலை

கிடைக்காமல் விவசாயிகள் அவதியையும் சந்தித்து வந்தனர். விவசாயிகளின் இச் சிரமங்களைப் போக்கும் வகையில், மிளகாய் விவசாயிகளுக்கு இயற்கையான முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் தயாரான சூரிய ஒளி உலர்களத்தினை அரசு அறிமுகம் செய்துள்ளது. இந்த உலர்களம் முழுக்க, முழுக்க பாலிதீனால் செய்யப்பட்டு, மிளகாய் பயிரை பாதுகாக்கக் கூடியதாகவும் இருந்து வருகிறது.இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கங்காதரன் கூறியது:

சூரிய ஒளி உலர்களம் 50 அடி நீளம், 10 அடி அகலம், 6 அடி உயரம் உடையது. சூரிய ஒளியால் இயங்கக்கூடிய இந்த உலர்களத்தில் புற ஊதாக்கதிர்களை வடிகட்டி வெப்பத்தை இரு மடங்காக அதிகரித்து உள்ளே வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மிளகாய் பயிருக்கு தேவையான வெப்பத்தை மட்டும் கட்டுப்பாடு செய்து உள்ளே அனுமதிக்கிறது. வாய்க்கால் வரப்புகளிலும், கண்மாய்க் கரைகளிலும் நாள் கணக்கில் காய வைக்கப்பட்டு வந்த மிளகாய்கள், இந்த உலர்களத்தில் 3 நாள்கள் முழுவதுமாக காய்ந்து நல்ல மிளகாய்களாக காட்சியளிக்கும். மேலும், மிளகாயின் வண்ணமும் மாறாமல் அப்படியே பொலிவுடன் இருப்பதோடு தூசி, பறவை எச்சம், மணல் போன்ற பாதிப்புகள் இல்லாமல் தற்போது விளைந்த மிளகாய் போன்றே விவசாயிகளுக்கு பாதுகாப்பாக கிடைக்கிறது. ரூ.92,400 மதிப்பிலான இந்த உலர்களத்தினை அரசு விவசாயிகளுக்காக 90 சதவிகித மானியத்தில் வழங்கத் தயாராக இருக்கிறது. இதற்காக விவசாயிகள் ரூ.9,600 மட்டும் செலுத்தினால் போதும். 10 முதல் 15 விவசாயக் குழுக்களாகச் சேர்ந்து விண்ணப்பித்தால் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத் திட்டம் ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல் முதலாக கடலாடி வட்டாரத்தில் சோதனை முறையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக கடலாடி பகுதி விவசாயிகளுக்காக 25 சூரிய உலர்களங்கள் வழங்க அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 10 விவசாயக் குழுக்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளன. மேலும், விவசாயக் குழுக்கள் விண்ணப்பித்தால் அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் கங்காதரன் தெரிவித்தார். பேட்டியின் போது, உதவி இயக்குநர் ராஜேந்திரன், அழகேசன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

## மாநில அரசின் நலத் திட்டங்களில் மத்திய அரசு தலையிடக் கூடாது: விதை உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தல்

மாநில அரசின் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்களில் தலையிடுவதை மத்திய அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தமிழ்நாடு விதை உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து, அச்சங்கத்தின் மாநிலச் செயலர் சி.காளிதாஸ் தாராபுரத்தில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களுக்கு மத்திய அரசு வழங்கும் குறைந்த பட்ச ஆதரவு விலையுடன் மாநில அரசு கூடுதலாக இடைநிகழ் செலவுகளுக்கான ஊக்கத் தொகை வழங்கி கொள்முதல் செய்யக்கூடாது என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு கிடைக்கும் உபரி வருவாய் பாதிப்பதுடன், நெல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் சாகுபடி பரப்பு குறைந்து மாநில உணவு தானியக் கையிருப்பில் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மத்திய அரசு, மாநில அரசின் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்களில் தலையிடுவதை மறு பரிசீலனை செய்யவேண்டும். நடப்பாண்டு அக்டோபர் மாதத்திலிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு மத்திய அரசு வழங்கவுள்ள குவிண்டால் ரூ.1,400 உடன் மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகையை ரூ. 200-ஆக உயர்த்தி, குறைந்தபட்ச நெல் விலையை குவிண்டாலுக்கு ரூ.1,600-ஆக நிர்ணயம் செய்யவேண்டும். நடப்பு நிதியாண்டில் சான்றுவிதை 40 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தெற்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழையை பொறுத்து மொத்த உற்பத்தி 80,000 மெட்ரிக் டன் அளவை எட்ட வாய்ப்புள்ளது. தமிழக முதல்வரின் நீண்ட சட்டப்போராட்டத்திற்குப் பின், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதால் மத்திய அரசு உடனடியாக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் பங்கீட்டுக் குழுவை அமைத்து, தமிழக விவசாயிகளின் நலன் காக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். வெளிமாநில விதைகளின் பங்களிப்பால் தமிழ்நாடு இடுபொருள் சந்தையில் தமிழக ரகங்களின் தேவையில் மாற்றமிருக்க வாய்ப்புள்ளது. எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சந்தை மதிப்புடைய உயர்விளைச்சல் விதை ரகங்களை வெளியிடவேண்டும். உணவுப் பாதுகாப்பு மசோதவில் தமிழக அரசு சுட்டிக்காட்டியுள்ள முரண்பாடுகளைக் களைந்து, உரிய திருத்தங்களை கொண்டுவந்து, பொதுவிநியோகத் திட்டத்தை மாநில அரசு சிறப்புடன் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

## கடைமடை பகுதிக்கு செல்லும் வரை தண்ணீர் திறக்க வேண்டும்

கரூர் மாவட்டத்தின் கடைமடை பகுதிக்கு செல்லும் வரை அமராவதி அணையில் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் உள்ள அமராவதி அணையின் மூலம் கரூர் மாவட்டத்தில் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதியான சுமார் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக அணையில் இருந்து மாவட்டத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். மேலும் ஆற்றில் குடிநீருக்காக போடப்பட்ட குடிநீர் உறிஞ்சுகள் வற்றியதால் ஆற்றின் கரையோரம் இருந்த தென்னை மரங்கள் கருகின. இதனால் ஆவேசமடைந்த மாவட்ட விவசாயிகள் கடந்த 16-ம் தேதி சின்னதாராபுரம் அருகே உள்ள ஒத்தமாந்துறையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து பழனி கோட்ட அமராவதி குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதின்பேரில் வரும் 21-ம் தேதி குடிநீர் திறக்கப்படும் என உறுதியளித்தனர். இந்நிலையில் அணையில் 1.3 டிஎம்சிக்கும் குறைவாக இருந்ததால் தண்ணீர் திறப்பதில் காலதாமதமானது. இதனிடையே அணையின் நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்துவருவதையடுத்து அணையின் நீர்மட்டம் 1.3 டிஎம்சி அளவை எட்டியதால் அணையில் இருந்து புதன்கிழமை விநாடிக்கு 2,500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் 6 நாட்களுக்கு மட்டும் விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் தண்ணீரை கடைமடை பகுதிக்கு வரை விடவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து நிலத்தடிநீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க செயலாளர் எம். ராமலிங்கம் கூறியது:

அணையின் மொத்த உயரம் 90 அடி உள்ள நிலையில், அணையின் நீர் இருப்பு 58 அடியாக உள்ளது. தற்போது மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவியதையடுத்து ஆறு வறண்டு நீர்மட்டம் மிகவும் குறைந்து போயுள்ளது. இதனால் 6 நாட்களுக்கு விடும் தண்ணீர் பூமியின் வெடிப்பை தாண்டி செல்லுமா என்ற நிலை உள்ளது. இதனால் திறக்கப்படும் தண்ணீர் மாவட்டத்தின் கடைமடை பகுதியான திருமுக்கூடலூர் வரை செல்லும் வகையில் திறக்க வேண்டும். அப்போதுதான் கடைமடை விவசாயிகளும் பயன்பெறுவர் என்றார்.

## "வேளாண்மைக்கு ஊறு விளைவிக்கும் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கக் கூடாது'

வேளாண்மைக்கு ஊறு விளைவிக்கும் எந்தத் திட்டத்தையும் நடைமுறைபடுத்தவும், தொழில் நிறுவனங்கள் தொடங்கவும் மத்திய, மாநில அரசுகள் அனுமதி அளிக்கக் கூடாது என்றார் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தியும், காவிரி டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை கைவிட மத்திய அரசை வலியுறுத்தியும் புதன்கிழமை மன்னார்குடியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், தமிழர் உரிமை மீட்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

காவிரி நீர் பிரச்னையில் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் தேவைக்காக சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக போராடி வருகிறோம். கர்நாடக அரசு, மேகதூது அணையை புதிதாக கட்டப்போவதாக அறிவித்துள்ளது. காவிரி நீர் பிரச்னையில் பாரா முகமாகத்தான் மத்திய அரசு உள்ளது. பூமிக்கடியில் இருக்கும் நிலக்கரியை எடுக்க மீத்தேன் எரிவாயு இடையூறாக இருப்பதால் அதனை வெளியேற்றி விட்டு நிலக்கரியை எடுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது. இதனால் நீர், நிலம், காற்று என அனைத்தும் பாதிக்கப்பட்டு மக்கள் வசிக்க முடியாத பகுதியாக டெல்டா மாவட்டங்கள் மாறிவிடும் ஆபத்து உள்ளது என்றார். கூட்டத்தில் கட்சியின் மாநில பொதுச் செயலர் க. ராஜேந்திரன், பொருளாளர் பி. ரத்தினசாமி,பிரசாரச் செயலர் பால். ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விவசாயத்தை பாதுகாக்கக் கோரி நாகர்கோவிலில் ஆர்ப்பாட்டம்

விவசாயத்தை பாதுகாக்கக் கோரியும், ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்க வலியுறுத்தியும் நாகர்கோவிலில் ஏர் கலப்பையுடன் தமிழ்நாடு தலித் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு இலக்கிய அணி மாநிலச் செயலர் ஜனார்த்தனன் தலைமை வகித்தார். நாகர்கோவில் நகரச் செயலர் ஆனந்த், ஒன்றியச் செயலர்கள் கனகராஜ், ராஜ்குமார், அஜித் மாதவன், ஜெகன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஆர்ப்பாட்டத்தை மாநிலத் தலைவர் வை. தினகரன் தொடங்கி வைத்தார். மாநிலப் பொருளாளர் அருளானந்தம், மாநில துணைச்

செயலர் ஜெயசிங், மாநில துணை ஒருங்கிணைப்பாளர் நாஞ்சில் பாபு, குமரி மாவட்ட பொதுச்செயலர் ராஜன் உள்ளிட்டோர் பேசினர். அழிந்து வரும் விவசாயத்தை பாதுகாக்கக் கோரியும், ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்க வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் கோஷமிட்டனர்.

## நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற வேண்டும்: மஜத

கர்நாடகத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று, மதச்சார்பற்ற ஜனதா தள சட்டப்பேரவைக் குழுத் தலைவர் குமாரசாமி வலியுறுத்தினார். கர்நாடக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை நீர்ப்பாசனத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று அவர் பேசியது:

நீர்ப்பாசனத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி விகிதம் படிப்படியாக குறைந்து வருவதாக காங்கிரஸ் உறுப்பினர் பசவராஜ்ராய ரெட்டி கூறியிருந்தார்.

திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதைவிட, ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்தினோமா என்பதே முக்கியம். வேளாண் பணிகளுக்கு ஊக்கமளிக்க நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியம். ஆனால், நீர்ப்பாசனத் திட்டங்களை சரியாக செயல்படுத்துவதில் மாநில அரசு தோல்வி அடைந்துள்ளது. கிருஷ்ணா, காவிரி, மகாதாயி நதிகளில் மாநிலத்திற்கு கிடைத்துள்ள நீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக திட்டப் பணிகளுக்குப் பயன்படுத்தாததே காரணம். திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் காலத்தாமதம் ஏற்பட்டுவதால், அதன் மதிப்பீடு உயருகிறது. இதனால், நீர்ப்பாசனத் திட்டங்கள் முடங்கியுள்ளன. கிருஷ்ணா நதியில் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 130.90 டி.எம்.சி. தண்ணீரை முழுமையாக கர்நாடகத்தால் பயன்படுத்த முடியவில்லை. கிருஷ்ணா திட்டத்திற்கு கடந்தாண்டு ரூ. 3147.15 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ. 2613 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. நிகழ் நிதியாண்டில், ரூ. 4,100 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ. 2 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது. புதிய பணிகளுக்கு பதிலாக பழைய கால்வாய்களை சீரமைக்கும் பணிக்கே இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் முறைகேடு நடந்துள்ளது. அரசு தவறானப் பாதையில் சென்று கொண்டுள்ளது என்று எச்சரிக்கிறேன். தகுதியிழந்த ஒப்பந்ததாரர்களிடம் கட்டுமானப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார் குமாரசாமி.

## பெங்களூருவில் ஒரு மரம் வெட்டப்பட்டால்10 மரக் கன்றுகள் நடும் திட்டம்'

பெங்களூருவில் ஒரு மரம் வெட்டப்பட்டால் அதற்குப் பதிலாக 10 மரக் கன்றுகள் நடும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று, கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்தார். கர்நாடக சட்ட மேலவையில் வியாழக்கிழமை கேள்வி நேரத்தின் போது, பாஜக உறுப்பினர் வி.சோமண்ணாவின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:

பெங்களூரு மாநகரில் சாலைகள் அகலப்படுத்துதல், மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக மரங்கள் வெட்டப்பட்டன. 2010ஆம் ஆண்டு முதல் பெங்களூரு மாநகராட்சியால் 7,853 மரங்களும், பெங்களூரு மெட்ரோ ரயில் நிறுவனத்தால் 1,428 மரங்களும் வெட்டப்பட்டன. இந்த மரங்களை விற்பனை செய்ததில், மாநகராட்சிக்கு ரூ. 54.81லட்சமும், பெங்களூரு மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு ரூ. 2.29 லட்சமும் வருவாய் கிடைத்துள்ளது. இதேபோல, 2012-13ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட மரங்களுக்கு மாற்றாக, பெங்களூருவில் 1,77,325 மரக் கன்றுகள் நடப்படும். நகரமயமாக்கல் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகளுக்காக மரங்களை வெட்ட நேர்ந்தால், ஒரு மரத்துக்கு 10 மரக் கன்றுகள் நடப்படும். சாலையோரங்களில் பாதுகாப்பு இல்லாததால் நடப்படும் மரக் கன்றுகளில் 40 சதம் மட்டுமே பிழைத்துக் கொள்கின்றன.சுற்றுப்புறம் பசுமையாக இருந்தால், உடல் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். எனவே, நடப்படும் மரக் கன்றுகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு பெங்களூரு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பெங்களூரு மாநகராட்சியில் பணியாற்றி வரும் வனத் துறை அதிகாரிகளை அந்தத் துறைக்கே மீண்டும் இடமாற்றம் செய்யப்படும். இதற்கான நடவடிக்கை விரைவில் தொடங்கும் என்றார் அவர்.

## வானிலைசார் பயிர்க் காப்பீடு: பதிவு செய்ய காலஅவகாசம்

கர்நாடகத்தில் வானிலைசார் பயிர்க் காப்பீட்டை பதிவு செய்ய வருகிற 31-ஆம் தேதி வரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கர்நாடக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2014ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை காலத்தில், வானிலைசார் பயிர்க் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய வருகிற 31ஆம் தேதி வரை காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு பயிர்காப்பீடுத் திட்டத்தில் பதிவு செய்து விவசாயிகள் பயனடையலாம்.விவசாயிகள் விதைப்பு

உறுதி, பயிர்நிலை சான்றிதழ்களை பதிவு செய்யும் போது பயிர்க் காப்பீட்டுக்கான சான்றிதழையும் பெறலாம். அனைத்து வகையான விவசாயிகளும் இந்தத் திட்டத்தில் பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள விவசாயிகள் தொடர்புமையம் அல்லது வங்கிக் கிளையை அணுகலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏரி ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை

பெங்களூருவில் ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று, கர்நாடக சிறிய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி தெரிவித்தார். கர்நாடக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை நீர்ப்பாசனத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மதச்சார்பற்ற ஜனதா தள சட்டப்பேரவைக் குழுத் தலைவர் குமாரசாமி பேசியது:

பெங்களூருவில் குப்பைகளை அகற்றும் விவகாரம் குறித்து நகர வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுகிறேன். தற்போது, பெங்களூருவில் 1985ஆம் ஆண்டில் 264 ஏரிகள் இருந்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இப்போது பெங்களூருவில் 22 ஏரிகள் மட்டுமே உயிர்ப்புடன் இருக்கின்றன. மீதமுள்ள ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஏரி வளர்ச்சி ஆணையம் செயலற்று கிடக்கிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏரிகளை மீட்க வேண்டும் என்றார் அவர்.இதற்குப் பதிலளித்து மாநில சிறிய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி கூறியது:

பெங்களூருவில் உள்ள ஏரிகளில் 11 ஏரிகள், எனது துறையின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன. பெங்களூருவில் ஏரி நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். ஏரிகளை மேம்படுத்துவதற்காகவே ஏரி மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. பெங்களூரு வளர்ச்சி ஆணையம், பெங்களூரு மாநகராட்சி, வனத் துறையிடமும் சில ஏரி நிர்வாகங்கள் உள்ளன. இந்த ஏரிகளின் மேம்பாட்டுக்கும் திட்டம் வகுத்துச் செயல்படுத்துவோம். இதன்மூலம், நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்றார் அவர்.

## கொள்முதலும் ஊக்கத் தொகையும்!

நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு சென்ற மாதம் உயர்த்தியது. இதன்படி, அக்டோபர் மாதம் நடைபெறும் கொள்முதலில், ஒரு குவிண்டால் சன்ன ரக நெல்லுக்கு ரூ.1,400 கிடைக்கும்.

ஆனால், ஜூலை 7-ஆம் தேதி மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பில், மாநில அரசுகள், நெல் மற்றும் கோதுமைக்கு அறிவிக்கும் ஆதரவு விலையைக் காட்டிலும் கூடுதலாக போனஸ் அல்லது ஊக்கத் தொகையை அறிவிக்கக்கூடாது என்று கூறியுள்ளது. மத்திய அரசின் உத்தரவுக்கு மாறாக மாநில அரசுகள் ஊக்கத் தொகை வழங்கினால், அந்த மாநிலத்துக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவைக் காட்டிலும் கூடுதலாக நெல் அல்லது கோதுமையை இந்திய உணவுக் கழகம், மத்திய தொகுப்பிற்கு கொள்முதல் செய்யாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, மாநில அரசுகள் போனஸ் அல்லது ஊக்கத் தொகை அறிவிப்பது அவர்களைப் பொருத்த விவகாரம். அவர்கள் கூட்டும் சுமையை மத்திய அரசின் தோளில் ஏற்றக்கூடாது என்பதுதான் இதன் வெளிப்படையான செய்தி. இந்த நடவடிக்கை மூலம் நெல், கோதுமை விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்றும், மத்திய அரசின் மானியத் தொகை அளவு கட்டுக்குள் இருக்கும் என்றும் மத்திய அரசு நம்புகிறது. மத்திய அரசின் இந்த முடிவுக்கான காரணம், தற்போது பயிர்களுக்காக அளிக்கப்படும் மானியத் தொகை சுமார் ரூபாய் ஒரு லட்சம் கோடியை, மேலும் மிகாமல் தடுக்க வேண்டிய கட்டாயமும், நெல், கோதுமையின் சந்தை நடமாட்டம் தடைபடாமல் இருந்தால் விலை குறையும் என்றும் அவர்கள் நம்புவதுதான். மாநில அரசுகள் ஊக்கத் தொகை அறிவிப்பதால், விவசாயிகள் மாற்றுப் பயிர்களைத் தேர்வு செய்யாமல் நெல் அல்லது கோதுமையை உற்பத்தி செய்வதால், அளவுக்கு அதிகமான நெல், கோதுமை சந்தைக்கு வருகிறது. இதில் பெரும் பகுதியை மாநில அரசே கொள்முதல் செய்யும் நிலை ஏற்படுவதால், சந்தையில் தாராளமான புழக்கம் இருப்பதில்லை. இதனால், சந்தையில் அரிசி விலை உயர்ந்து கொண்டே போகிறது. அதே வேளையில், நியாயவிலைக் கடையில் மிகக் குறைந்த விலையில் அல்லது இலவசமாக அரிசி கிடைக்கவும் செய்கிறது. இந்த நிலையைச் சமன்படுத்த வேண்டுமானால், உற்பத்தியாகும் நெல், கோதுமை ஆகியவை சந்தையில் தாராளமான புழக்கத்தில் இருக்க வேண்டும். இவற்றை அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு மட்டும் திருப்பிவிடும் நிலை கூடாது என்பதுதான் இந்த முடிவுக்கு அடிப்படைக் காரணம். மேலும், இந்திய உணவுக் கழகம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் நிர்ணயித்துள்ள அளவுக்கு மேல் கொள்முதல் செய்தால்

அவற்றைப் பாதுகாக்கப் போதுமான இட சதியில்லை. பாழாகும் நெல், கோதுமை அளவும் அதிகரித்து வருகிறது. இதனால், மத்திய அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, இந்திய உணவுக் கழகத்தின் கொள்முதல் அளவைக் கட்டுப்படுத்துவதும் இந்த உத்தரவின் நோக்கம். எதுவாக இருப்பினும், வரும் ஆண்டில் பருவமழை 31% குறைவாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கும் சூழலில், "எல் நினோ' தாக்கம் இருக்கும் என்று எதிர்பார்க்கும் நேரத்தில், இவ்வாறு இந்திய உணவுக் கழகத்தின் கொள்முதலைக் கட்டுப்படுத்துவது சரியா என்பதை மத்திய அரசு சிந்திப்பது நல்லது. தமிழ்நாட்டைப் பொருத்தவரை பொது ரக நெல்லுக்கு ரூ.50-ம், சன்ன ரக நெல்லுக்கு ரூ.70-ம் தமிழக முதல்வர் ஊக்கத் தொகையாக அறிவித்து வழங்கி வருகிறார். கடந்த கொள்முதல் பருவங்களில் மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.1,345 மற்றும் தமிழக முதல்வர் அறிவித்த ஊக்கத் தொகை ரூ.70-ஆக மொத்தம் ரூ.1,415 கிடைத்தது. வரும் அக்டோபரில் கொள்முதல் பருவம் தொடங்குகிறது. தற்போது மத்திய அரசு உயர்த்தி அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலைப்படி தமிழக விவசாயிகள் ஒரு குவிண்டால் சன்ன ரக நெல்லுக்கு ரூ.1,470 பெற வேண்டும். மத்திய அரசின் அறிவிப்பை ஏற்று, தமிழக முதல்வர் தொடர்ந்து ஊக்கத் தொகை வழங்குவார். இதனால் ஏற்படும் இழப்பை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிப்பார் என நம்பலாம். இந்த ஊக்கத் தொகை மூலம், தமிழக அரசுக்கு அதிகபட்சமாக ரூ.100 கோடி வரை கூடுதல் செலவாகும். குறைந்தபட்ச ஆதரவு விலை, ஊக்கத் தொகை போன்றவை மட்டுமே, விவசாயிகளின் பிரச்னைக்கும், உணவு தானிய உற்பத்தி மற்றும் தேவைக்கும் தீர்வாகிவிடாது. இந்திய அரசு அளவுக்கு அதிகமாக உற்பத்தியை அதிகரித்து, கொள்முதல் செய்து, முறையாக விநியோகிக்கப்படாமல் விரயமாவது முதலில் தடுக்கப்பட வேண்டும். சரியான புள்ளிவிவரங்கள், பாதுகாப்பான கிடங்குளில் சேமிப்பு, முறையான விநியோகம் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே பிரச்னையை நாம் சரியாக எதிர்கொள்வதாகக் கருத முடியும்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் 3 அடி உயர்வு



மேட்டூர் அணை நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 67.42 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்வரத்து விநாடிக்கு 32,756 கனஅடி எனவும் அணையில் இருந்து விநாடிக்கு 800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேட்டூர் அணையின் நீர் இருப்பு 30.51 டிஎம்சி என்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## நீலகிரி மலைப்பகுதியில் தொடர் மழை எதிரொலி : பவானிசாகர் அணை நீர்மட்டம் உயர்வு

சத்தியமங்கலம்: நீலகிரி மலைப்பகுதியில், தொடர்ந்து மழை பெய்வதால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம், வேகமாக உயர்ந்து வருகிறது. தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்டது, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடி. இதில், சகதி, 15 அடி கழித்து, மொத்த

நீர்மட்ட உயரம், 105 அடியாகும். மொத்த, நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., .இந்த அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறந்துவிடும் தண்ணீரால், ஈரோடு மாவட்டத்தில், 2.07 லட்சம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர், பாசனம் பெறும். கடந்த சில மாதங்களாக, பவானிசாகர் அணையின், நீர்பிடிப்பு பகுதியில், போதிய மழையின்றி, அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்தது. இதனால் ஈரோடு மாவட்டத்தில், குடிநீர் பஞ்சம் ஏற்படும் அச்சம் நிலவியது. இந்நிலையில், பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், தென்மேற்கு பருவமழை துவங்கியதால், அணையின் நீராதாரமான, பவானி ஆறு மற்றும் மோயாற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து, நேற்று மாலை, 64 அடியை தொட்டது. மேட்டுப்பாளையம் அருகே பில்லூர் அணை நிரம்பியதால், அதன் உபரி நீர், பவானி ஆற்றில் திறக்கப்பட்டது. இதனால் நேற்று மாலை, அணைக்கு வினாடிக்கு, 12,400 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றின் வழியாக, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதிக்கு, வினாடிக்கு, 1,450 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது அணையில், 8.5 டி.எம்.சி., தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டு, இதே நேரத்தில், அணையின் நீர்மட்டம், 71 அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால், கீழ்பவானி வாய்க்காலில், வரும் ஆகஸ்ட், 15ம் தேதி பாசனத்துக்காக, தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளதாக, ஈரோடு மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ஒரு கிலோ எடையுடன் நூல்கோல் விளைச்சல்

தாண்டிக்குடி: தாண்டிக்குடியில் வீட்டு தோட்டத்தில் வளர்க்கப்பட்ட நூல்கோல் வழக்கத்தை காட்டிலும் ஒரு கிலோ விற்கு மேற்பட்டு விளைந்துள்ளது. தாண்டிக்குடியை சேர்ந்தவர் ராஜதாஸ். இவரது வீட்டு தோட்டத்தில் கடந்த இரு மாதங்களுக்கு முன் நூல்கோல் பயிரிட்டுள்ளார். தற்போது அறுவடை செய்யும் நேரத்தில் வழக்கத்தை காட்டிலும் ஒரு செடியில் மட்டும் பெரிய அளவிலான நூல்கோல் இருந்தது. வழக்கமாக 120 நாட்கள் கழித்து 120 முதல் 150 கிராம் வரை எடையளவு உள்ள நூல்கோல் கிடைக்கும். தற்போது ஒரு கிலோ எடை கொண்ட நூல்கோல் விளைந்துள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் கூறுகையில், 'வழக்கமாக 120 முதல் 150 கிராம் எடை கொண்ட கிழங்குகள் மட்டுமே கிடைக்கும். தற்போது இதுபோன்ற நிலைக்கு சீதோஷ்ண நிலையும் , விதையின் மூலக்கூறுகளும் காரணமாக இருக்கும். தொடர்ந்து இதன் மூலம் தாய் செடிகளை உற்பத்தி செய்தால் அதிக எடை கொண்ட நூல்கோல் கிடைக்கும், என்றனர்.

## பருவ நிலை மாறுதலை எதிர்கொள்ளும் திட்டம் : இவ்வாண்டு துவக்கப்படும் என அமைச்சர் தகவல்

சென்னை : காவிரி டெல்டாவில், பருவநிலை மாறுதலை எதிர்கொள்ளும் திட்டம், 1,560 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்," என, அமைச்சர் பன்னீர்செல்வம் தெரிவித்தார். சட்டசபையில், அவர் கூறியதாவது: கடலோரப் பகுதிகளில், குறிப்பாக, டெல்டா மாவட்டங்களான, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில், பருவமழைக் காலங்களில், மிக அதிகப்படியான மழை பொழியும். அப்போது, வெள்ளம் ஏற்பட்டு, மிகுந்த பாதிப்புகள் ஏற்படுகின்றன. உலக அளவிலான பருவ நிலை மாற்றத்தால், கடல் நீர்மட்டம் உயர்ந்து, கடலோரப் பகுதி அருகில் உள்ள விளை நிலங்களில், உப்பு நீர் ஊடுருவி பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதை தடுக்க, காவிரி டெல்டாவில், பருவநிலை மாறுதலை எதிர்கொள்ளும் திட்டத்தை , 1,560 கோடி ரூபாயில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த, முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இத்திட்டத்தால், மூன்று மாவட்ட, கடலோரப் பகுதிகள், வெள்ள பாதிப்பு மற்றும் கடல் நீர் உட்புகுந்து, விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதில் இருந்து பாதிக்கப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக, வெண்ணாறு உப வடிநிலத்தில் உள்ள அடப்பாறு, அரிச்சந்திரா நதி, பாண்டவையாறு, வெள்ளையாறு, வளவனாறு வடிகால்கள் மற்றும் வேதாரண்யம் கால்வாய், ஆகிய, 6 ஆறுகள் மற்றும் வடிகால்களில் உள்ள, பாசன அமைப்புகளை மேம்படுத்த, ஏழு தொகுப்புகளில், 570.73 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்ட, விரிவான திட்ட மதிப்பீடுகள், மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்ததும், இவ்வாண்டே பணிகள் துவக்கப்படும். இவ்வாறு, அமைச்சர் தெரிவித்தார்.

## விவசாய கடனுக்கு ரூ.8 லட்சம் கோடி பட்டய கணக்காளர்கள் வரவேற்பு

மதுரை: "மத்திய பட்ஜெட்டில் விவசாய கடனுக்கு எட்டு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது," என தென்னிந்திய பட்டய

கணக்காளர்கள் அமைப்பின் தலைவர் ராஜராஜேஷ்வரன் கூறினார்.'மதுரை சவுராஷ்டிரா சேம்பர் ஆப் காமர்ஸ்' சார்பில் மத்திய பட்ஜெட் ஆய்வு கூட்டம் நடந்தது.இதில் ராஜராஜேஷ்வரன் பேசியதாவது: விவசாயம், சூரியஒளி மின்சக்தி, விமான சேவை, குடிநீர் ஆதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகள்; தமிழகம் முதல் காஷ்மீர் வரை அனைத்து மாநிலங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டதாக பட்ஜெட் உள்ளது. 'கிசான் விகாஸ்' பத்திரம் மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது. என்.எஸ்.சி.,யில் (நேஷனல் சேவிங் சர்டிபிகேட்) இன்சூரன்ஸ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாய கடனுக்கு எட்டு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பட்ஜெட் உள்ளது.இவ்வாறு கூறினார்.தென்னிந்திய பட்டய கணக்காளர் அமைப்பின் மதுரை கிளை உறுப்பினர் சந்திரசேகரன், சவுராஷ்டிரா சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் பிரபாகரன், கலாதர்பாபு, மோகன்ராம், ரமேஷ் கலந்து கொண்டனர்.

## உளுந்துக்கு நல்ல விலை; விவசாயிகள் மகிழ்ச்சி

பாபநாசம்: பாபநாசம் அருகே கபிஸ்தலம் சருக்கை, இளங்கார்குடி, மேட்டுத்தெரு, புத்தூர், ராமனுஜபுரம், உமையாள்புரம், ஒலைப்பாடி, துரும்பூர், திருவைக்காவூர், கொந்தகை உள்ளிட்ட கிராமங்களில், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில், கோடையில் உளுந்து சாகுபடி செய்தனர்.கோடை மழை மற்றும் வெப்ப சலனத்தால், மாறி மாறி மழை பெய்தாலும், இந்த ஆண்டு நல்ல விளைச்சல் கண்டுள்ளது. கடந்த ஆண்டு, ஒரு கிலோ உளுந்து, 35 முதல், 40 ரூபாய் வரை விற்பனையானது. இந்த ஆண்டு, ஒரு கிலோ, 70 முதல், 73 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. 70 நாள் பயிரான உளுந்து சாகுபடியில் நல்ல லாபம் கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## குளம் சீரமைக்கப்படுமா?

காந்தூர்: காந்தூர், தெரு குளத்தை சீரமைக்க வேண்டும் என, கிராமவாசிகள் கோரிக்கை வைத்துள்ளனர். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்திற்கு உட்பட்டது காந்தூர். இக்கிராமத்தில், சோகண்டி - மதுரமங்கலம் செல்லும் சாலையோரம், தெரு குளம் அமைந்துள்ளது.இக்குளத்தை சுற்றி, நான்கு பக்கமும் கிராம சாலைகளும்,

அதைத்தொடர்ந்து குடியிருப்பு பகுதிகளும் அமைந்துள்ளன.மழைக்காலங்களில், சாலையில் செல்லும் மழைநீர், இக்குளத்தில் சேகரிக்கப்படுகிறது.இதன் மூலம், பகுதிவாசிகள் பயன் அடைந்தனர். கால்நடைகளுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. இந்நிலையில், குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் குளத்தில் கலப்பதால் தண்ணீர் மாசு அடைந்துள்ளது.குளத்தில் வளர்ந்துள்ள தாமரைச் செடிகளை அகற்ற, குளத்தை சீரமைக்கவும், குளக்கரையை பலப்படுத்தவும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கிராமவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மரக்கன்றுகள் நடுவிழா

முருக்கேரி : முருக்கேரி அடுத்த அடசல் கிராமத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடு விழா நடந்தது. மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அடசல் கிராமத்தில் உள்ள அரசுக்கு செந்தமான புறம்போக்கு நிலத்தில் மரக்கன்றுகள் நடும் பணி மற்றும் பண்ணை குட்டை அமைக்கும் பணி நடந்தது. இதனை மாவட்ட திட்ட இயக்குனர் ராதா துவக்கி வைத்தார்.ஒன்றிய சேர்மன் விஜயா அர்ச்சுணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தர்மலிங்கம், சதாசிவம், ஊராட்சி மன்ற தலைவர் குணசேகர், கவுன்சிலர் லட்சுமி குணசேகர், செயலாளர் சந்திரசேகர் மற்றும் பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

## முருங்கை பவுடர் தொழிற்சாலை: அரவக்குறிச்சி விவசாயிகள் "கனவு'

கரூர்: "அரவக்குறிச்சி பகுதியில், முருங்கை காய் பவுடர் தொழிற்சாலை அமைக்க வேண்டும்' என்பது பல ஆண்டுகளாக, விவசாயிகளின் கனவாகவே உள்ளது. கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பகுதியில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் முருங்கைக்காய் பயிரிடப்படுகிறது. இப்பகுதி விவசாயிகளின் ஜீவாதாரமாக, முருங்கை சாகுபடி விளங்குகிறது. ஆண்டில், ஒன்பது மாதங்களுக்கு முருங்கைக்காய் விளைச்சல் உள்ளது. இப்பகுதியில், சாகுபடி செய்யப்படும் கொடி முருங்கை, செடி முருங்கை ஆகியவற்றுக்கு, வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. விளைவித்த முருங்கைக்காய் அரவக்குறிச்சி மற்றும் சுற்றுப்புற பகுதியில் உள்ள சந்தைகளிலும்,

இடைத்தரகர்கள் மூலம் விற்கப்படுகிறது. இடைத்தரர்கள் மூலம் குறைந்த விலைக்கு விவசாயிகளிடம் வாங்கி, அதிக விலைக்கு விற்பதால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். திருமண சீஸன், விழா போன்ற காலத்தில், 25 காய்களை கொண்ட ஒரு கட்டின் விலை, 25 முதல், 50 ரூபாய் வரையும், முருங்கை விளைச்சல் இல்லாத நேரத்தில், ஒரு கட்டு, 150 ரூபாய் வரை விலை போகும். விழா சீஸன் இல்லாத நேரம், முருங்கை காய் விளைச்சல் அதிகளவு உள்ள போது, முருங்கை விலை மிகவும் குறைந்து விடுகிறது. முருங்கைக்காய் இருப்பு வைக்க முடியாமலும், பாதுகாக்க முடியாமல் போவதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, பீஹார், மேற்கு வங்காளம், ஒடிஸா போன்ற மாநிலங்களில், மக்கள் அன்றாட உணவு பொருளாக முருங்கையை பயன்படுத்தி வருகின்றனர். அதிக நார்சத்து கொண்ட முருங்கை காய் பவுடர் தொழிற்சாலை, அரவக்குறிச்சி பகுதியில் அமைத்தால், விவசாயிகளின் உற்பத்தி பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன், மறைமுகமாகவும், நேரிடையாகவும், 500க்கு மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். கரூர் மாவட்டத்தில், மிகவும் பின்தங்கிய பகுதியான அரவக்குறிச்சியில் விவசாயிகளின் வசதிக்காக, முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பது விவசாயிகளின் பல ஆண்டு கனவாக உள்ளது. அரவக்குறிச்சி முருங்கை விவசாயிகள் கூறியதாவது: அரவக்குறிச்சி சுற்று வட்டாரத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சீஸன் மற்றும் விளைச்சல் குறைவு காலங்களில், ஒரு கட்டு முருங்கை, 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போது, முருங்கை விளைச்சல் அதிகரிப்பு காரணமாக, நடப்பு வாரத்தில் கொடி முருங்கை ஒரு கட்டு, 15 ரூபாய், செடி முருங்கை, 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது போன்ற காலங்களில் முருங்கை இருப்பு வைத்து, சீஸன் நேரத்தில் விற்பனை செய்தால், விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்றனர்.

## நாவல் பழம் வரத்து குறைவு

லாலாப்பேட்டை: கரூர் மாவட்டம் மாயனூர், திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம், மகாதானபுரம், சிந்தலவாடி, லாலாப்பேட்டை மற்றும் பல்வேறு பகுதிகளில் காவிரி கரையோரம் மற்றும் விவசாய தோட்டங்களில் நாவல் பழ மரங்கள் அதிகளவு உள்ளன. பழ வியாபாரிகள், மரங்களை குத்தகைக்கு எடுத்து, பழங்களை சேகரித்து, விற்பனைக்கு எடுத்து செல்கின்றனர். இப்பகுதிகளிலிருந்து, தினமும் திருச்சி, கரூர் ஆகிய நகரங்களுக்கு நவால் பழம் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.போதியளவு மழை இல்லாததால், நாவல் மரங்களில் குறைவான பழங்கள் உள்ளன. கடந்த சில வாரங்களாக, சுழற்றி அடிக்கும் காற்றால் பழங்கள் எல்லாம் உதிர்ந்து வீணாகின்றன. நாவல் உற்பத்தி குறைவால், கடந்த ஆண்டை விட நடப்பாண்டு கிலோவுக்கு, 10 ரூபாய் உயர்ந்து, நடப்பாண்டு ஒரு கிலோ, 50 ரூபாய்க்கும், அரை கிலோ, 25 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.நாவல் பழ விற்பனையாளர்கள் கூறுகையில், "ஆந்திரா மாநிலங்களிருந்தும் கொட்டை இல்லாத நாவல் பழங்கள், தமிழகத்திற்கு வந்தாலும், இப்பகுதி நாவல் பழங்களுக்கு தனி கிராக்கி உள்ளது. பருவமழை இல்லாததால், நவால் உற்பத்தி குறைந்து விட்டது. கடந்த ஆண்டு மொத்த விற்பனையில், ஒரு கிலோ, 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டு கிலோவுக்கு, 10 ரூபாய் உயர்ந்து, 50 ரூபாயாக விற்கப்படுகிறது,' என்றனர்.

## வேளாண்மை துறையில் டிரைவர்கள் பற்றாக்குறை! :ஜீப்கள் நிறுத்தத்தால் விரயமாகும் அரசு நிதி

ஈரோடு: அரசால் வழங்கப்பட்ட புதிய ஜீப்கள், ஆறு மாதங்களாக, டிரைவர் இல்லாததால், பயன்பாடு இன்றி, ஓரிடத்திலேயே நிற்கும் அவலம் தொடர்கிறது. ஈரோடு மாவட்ட வேளாண் துறையில், ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி, பவானி, அம்மாபேட்டை, அந்தியூர், டி.என்.பாளையம், தாளவாடி, பவானிசாகர், நம்பியூர், சென்னிமலையில் உதவி இயக்குனர் அலுவலகங்கள் உள்ளன. பொது, வணிகம், விதை ஆய்வு மற்றும் உழவர் பயிற்சி துணை இயக்குனர் அலுவலகங்கள் உள்ளன. உதவி இயக்குனர்கள் மட்டுமின்றி, துணை இயக்குனர்களும் திட்ட களப்பணிகளை, அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ள

வேண்டும். இதற்காகவே, இவர்களுக்கு அரசு சார்பில், ஜீப் வழங்கப்படுகிறது. கடந்த, ஆறு மாதங்களுக்கு முன், 15க்கும் மேற்பட்ட புதிய ஜீப்கள், வேளாண் துறை அலுவலகத்துக்கு வழங்கப்பட்டது. ஒவ்வொன்றும், தலா, ஆறு லட்சம் ரூபாய் மதிப்புடையவை. பணி ஓய்வு, டிரான்ஸ்பர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், ஏற்கனவே இருந்த டிரைவர்கள் சென்று விட்டனர். தற்போது, ஐந்து டிரைவர்கள் மட்டுமே உள்ளனர். ஆறு மாதங்களுக்கும் மேலாக, போதிய டிரைவர்கள் இல்லாததால், பெரும்பாலான ஜீப்கள், வேளாண் துறை அலுவலக வளாகத்தில், வரிசையாக அணிவகுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.போதிய டிரைவர்கள் இல்லாததே, இதற்கு முக்கிய காரணமாகும். தற்போது பணியில் உள்ள டிரைவர்களே, வார வேலை நாட்களில், ஓய்வின்றி தொடர்ந்து ஜீப்களை இயக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். உடல் நிலை சரியில்லை என்றாலும் கூட, ஜீப்பை இயக்க வேண்டிய நிலை உள்ளது.தற்போது, பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கூறும் புகார்களை ஆய்வு செய்ய, சம்பவ இடங்களுக்கு நேரில் அதிகாரிகளை அழைத்து செல்ல வேண்டியது, டிரைவரின் கட்டாயமாகும். ஆனால், குறைந்த அளவிலான டிரைவர்கள் மட்டுமே இருப்பதால், விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு கிடைப்பதில், சிக்கல் ஏற்பட்டுள்ளது.டிரைவர் பற்றாக்குறை பிரச்னையை போக்க, 9,000 ரூபாய் சம்பளத்தில், தற்காலிகமாக டிரைவர்கள் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் நீண்ட நாட்கள் பணியில் தொடரவில்லை. தனியாரிடம் இதைவிட, அதிக சம்பளம் கிடைப்பதே, இதற்கு காரணம். வீணாக ஜீப்கள் நிறுத்தப்படுவதை தவிர்க்கவும், களப்பணிகள் சரியாக நடக்கவும், பிற டிரைவர்களின் பணியை குறைக்கவும், காலியாக உள்ள டிரைவர் பணியிடத்தை, அரசு நிரப்ப வேண்டும், என வேளாண் துறையினர் எதிர்பார்க்கின்றனர்.

## சோலார் திட்டத்துக்கு மானியம்: விவசாயிகளுக்கு அழைப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில், நீர் மூழ்கி பம்புகளில், சோலார் திட்டத்தை செயல்படுத்த மானியம் வழங்கப்படுவதால், தகுதியான விவசாயிகள் விண்ணப்பங்களை அளிக்க, அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து, வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில், ஆறு "இன்ச்' ஆழ்துளை கிணற்றில் இருந்து, ஐந்து எச்.பி., திறன் கொண்ட நீர் மூழ்கி பம்புகள் அமைக்க, சோலார் பம்பு

அமைக்கும் திட்டத்துக்கான அரசாணை பெறப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.சோலார் பம்பு திட்டம் மூலம் விவசாயிகள், மின்சாரத்தை எதிர்நோக்காமலும், பிற எரிபொருள் செலவின்றியும், இயற்கையாக கிடைக்கும், சூரிய சக்தியினால் மின்சாரம் உற்பத்தி செய்து, அதன் மூலம் பம்புகள் இயக்கி, நீர் பாசனத்துக்கு வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தில், பம்பு செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் கருவி, நீர் மூழ்கி பம்பு செட் ஆகிய உபகரணங்கள், 80 சதவீத மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, அவர்களது நிலத்தில் பொருத்தி கொடுக்கப்படும்.இதன் மொத்த மதிப்பு, நான்கு லட்சத்து, 40 ஆயிரம் ரூபாய். இத்திட்டத்தில், பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்களது பங்களிப்பு தொகையாக, ஒரு லட்சத்து, 48 ஆயிரம் ரூபாய் செலுத்த தயாராக இருக்க வேண்டும். ஏற்கனவே, ஆறு "இன்ச்' ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு, அதில், 200 அடி ஆழத்துக்குள் நீர் இருக்க வேண்டும். விவசாயிகளது நிலத்தில், சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் கண்டிப்பாக அமைத்திருக்க வேண்டும். நிலத்தில், 200 சதுர மீட்டர் நிலம் நிழல் இல்லாத பகுதியாக இருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், பெயர், முகவரி, சர்வே எண், சிட்டா, அடங்கல், சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைத்திருக்கும் விவரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். திட்டத்தில் பயன்பெற விரும்பும், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43, செட்டியம்பட்டி ரோடு, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி,' என்ற முகவரியிலும், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் விண்ணப்பங்களை அளிக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## குறுவை சாகுபடி பணிகளை வேளாண் அதிகாரிகள் ஆய்வு

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் குறுவை சாகுபடி பணிகளை, வேளாண்மை துறை அதிகாரிகள், நேற்று ஆய்வு செய்தனர். தமிழகத்தில், டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரமுள்ள, குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் ஆகியவற்றின் மூலம், ஒரு லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடியை ஊக்குவிக்க அரசு முடிவு செய்தது. இதற்காக, 32.95 கோடி ரூபாய் சிறப்பு திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.இந்த திட்டத்தில், திருச்சி மாவட்டத்துக்கு 1.47 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம், நீர் ஆதாரமுள்ள பகுதிகளான

அந்தநல்லூர், முசிறி, மண்ணச்சநல்லூர் மற்றும் லால்குடி பகுதிகளில், 8,000 ஏக்கரில் குறுவை சாகுபடி பணிகள் நடந்து வருகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில், சமுதாய நாற்றங்கால் அமைக்க, ஒரு ஏக்கர் நாற்றங்கால், அமைக்க செலவினம் மற்றும் இடு பொருட்களுக்காக, 25 ஆயிரம் ரூபாய் வீதம், 100 சதம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.சமுதாய நாற்றங்கால், 70 ஏக்கரில் அமைக்கப்பட்டு, இதுவரை, 65 சமுதாய நாற்றங்காலில் இருந்து, 5,200 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யப்பட்டுள்ளது. லால்குடி பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட, அன்பில் கிராமத்தில் செயல்படுத்தப் பட்டு வரும், குறுவை சாகுபடி பணிகளை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் குருராஜ் சிங் பார்வையிட்டார். அப்போது அவர் கூறியதாவது: குறுவை நெற்பயிரின் உற்பத்தி திறனை அதிகரிக்க, 100 சதவீத மானியத்தில், ஒரு ஏக்கருக்கு, ஐந்து கிலோ நுண்சத்து உரம் மற்றும் 10 கிலோ சிங் சல்பேட் உரம் என, 5,000 ஏக்கருக்குரிய பயனாளிகளுக்கும், ஜிப்சம் ஒரு ஏக்கருக்கு, 200 கிலோ வீதம், 2,500 ஏக்கருக்கு உயிர் உரங்கள் மற்றும் திரவ வடிவிலான உயிர் உரங்கள், 4,000 ஏக்கருக்கும் வழங்கப்பட்டுள்ளது.மேலும், மாவட்டத்தில், 20 விவசாய குழுக்களுக்கு, 100 சதவீத மானியத்தில் நெல் நடவு இயந்திரம் மற்றும் நெற்பயிர் களையெடுக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பாசன நீர் விரயம் ஆவதை தடுக்க, வேளாண்மை பொறியியல் துறை மூலம் 150 விவசாயிகளுக்கு ஹெச். டி.பி.இ., பைப்புகள் வழங்கப்பட்டுள்ளது, என்றார்.அப்போது, தோட்டக்கலை துறை இணை இயக்குனர் சங்கரசேகரன், மாவட்ட கலெக்டர் (விவசாயம்) நேர்முக உதவியாளர் பாண்டியராஜன் உட்பட விவசாய துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

## மழைநீரில் மிதக்கும் தேயிலை தோட்டங்கள்; பந்தலூரில் தொடரும் கனமழை

பந்தலூர் : பந்தலூர் பகுதியில் பெய்து வரும் கனமழையால் தேயிலை தோட்டங்களில் நீர் புகுந்தது. நீலகிரி மாவட்டம் பந்தலூரில், கடந்தாண்டு ஜூன், 2ம் தேதி முதல், ஜூலை 23ம் தேதி முடிய உள்ள காலத்தில், 137.26 செ.மீ., மழை பதிவாகியிருந்தது. நடப்பாண்டில், இதே காலத்தில், 125.57 செ.மீ., மழையளவே பதிவாகியுள்ளது. இதில், கடந்த 23ம்தேதி ஒரு நாள் மட்டும், 9.65 செ.மீ., மழை பெய்துள்ளது. இதனால் முக்கிய நீராதாரங்களில் நீரின் அளவு உயர்ந்து

வருகிறது.சதுப்பு நிலப்பகுதிகளில் மரவள்ளி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தொடர் மழை மற்றும் மேகமூட்டம் காரணமாக, தேயிலை உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது. இந்நிலையில், பந்தலூரில் உற்பத்தியாகும், முக்கிய கிளை நதியான பொன்னானி ஆற்றில், தண்ணீரின் அளவு நேற்று அதிகரித்தது. ஆற்றில் வெள்ளம் அதிகரித்த நிலையில், கரையோரங்களில் உள்ள சாலைகளை தண்ணீர் மூழ்கடித்தது; தேயிலை தோட்டங்களிலும் தண்ணீர் புகுந்தது. கிராமப்புறங்களில் கால்வாய்கள், நீரோடைகளில் தண்ணீர் நிறைந்ததால், மக்கள் குடியிருப்புகளுக்கு செல்ல முடியாத நிலையில் பாதிக்கப்பட்டனர். மழையால் ஏற்படும் பாதிப்புகளை கண்காணிக்கும் பணியில் வருவாய் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

## ஊரக வேலை உறுதி திட்டத்தில் பண்ணைக்குட்டைகள் அமைப்பு

தேனி :ஊரக வேலை உறுதி திட்டத்தில் பண்ணைக்குட்டைகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ஊராட்சி பகுதியில் உள்ள சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன்படி ஆதிதிராவிட விவசாயிகளின் நிலங்களில் மழைக்காலங்களில் மழை நீரை சேமித்து வைக்கும் வகையில் பண்ணைக் குட்டைகள் அமைத்து தர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் விவசாயத்திற்கு தேவையான நீரைப் பாய்ச்சுவதற்கு வழி ஏற்படுகிறது. எனவே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விருப்பம் உள்ள சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகள் அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வட்டார வளர்ச்சி (கிராம ஊராட்சி) அலுவலரை நேரில் சந்தித்து பயன்பெறுமாறு கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## கிணற்று நீர் பரிசோதனைக்கு தோட்டக்கலைத்துறை திட்டம்

கம்பம் :மண் மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்வது போல, பாசனத்திற்கு பயன்படும் கிணற்று நீரையும் பரிசோதனை செய்ய தோட்டக்கலைத் துறை திட்டமிட்டுள்ளது. சாகுபடி செய்யும் மண்ணில் உள்ள சத்துக்கள் என்ன, தேவை

என்ன என்பதை மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும். உதவி விவசாய அலுவலர்களுக்கு மண்பரிசோதனைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வாரு உதவி விவசாய அலுவலரும் தங்கள் பகுதியில் 500 மண் மாதிரிகள் எடுத்து, பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.கிணற்று நீர் பரிசோதனை: பரிசோதனைக்கு பின் அதற்கேற்ப உரம் மற்றும் பூச்சி மருந்துகளை சிபாரிசு செய்வார்கள்.விவசாயத்துறை பெரும்பாலும் நெல் விவசாயிகளுக்கு மட்டுமே மண் மாதிரிகள் எடுக்கின்றனர். அதே சமயம் கிணற்று பாசனம் நடைபெறும் தோட்டங்களில், மண் பரிசோதனையுடன், தண்ணீர் பரிசோதனை மேற்கொண்டால் தான் நல்ல மகசூல் கிடைக்கும். இது தொடர்பாக பரவலாக கோரிக்கைகள் வந்ததை தொடர்ந்து தோட்டக்கலைத்துறை திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. அதன்படி கிணற்று நீரில் உள்ள சத்துக்கள் பற்றி தெரிந்து கொண்டு, அதற்கு ஏற்ப பயிர்களை சாகுபடி செய்வதற்கு கிணற்று நீர் பரிசோதனைக்கும் தோட்டக்கலைத்துறை முன்வந்துள்ளது. தோட்டக்கலைத் துறையினர் கூறியதாவது: இலக்கு நிர்ணயம்: இந்த ஆண்டு முதல் உதவி தோட்டக்கலை அலுவலர்களுக்கு மண் பரிசோதனைக்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கிணற்று நீரை விவசாயிகளே பரிசோதனை செய்து வந்தனர். தற்போது பாசனத்திற்கு பயன்படும் கிணற்று தண்ணீர் பரிசோதனையை தோட்டக்கலைத்துறை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. கிணறுகளில் உள்ள தண்ணீரையோ, கிணற்று மேட்டில் தொட்டிகளில் உள்ள தண்ணீரையோ பரிசோதனைக்கு எடுக்க கூடாது. கிணற்றில் மோட்டாரை ஒரு மணிநேரம் ஓடவிட்டு, அதில் வரும் தண்ணீரை பிடித்து பரிசோதனை செய்ய வேண்டும். இதற்கான பணிகள் விரைவில் துவங்கும்' என்றனர்.

## வேளாண் பயிற்சி

விருதுநகர்: ஆத்மா திட்டத்தின்கீழ் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் உளுந்து விளைபொருள் ஆர்வலர் குழுவிற்கான பயிற்சி பரளச்சியில் நடந்தது. வேளாண் துணை இயக்குனர்(வேளாண் வணிகம்) முத்துமுனியாண்டி தலைமை வகித்தார். ம.ரெட்டியபட்டி வேளாண் உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள் முன்னிலை வகித்தார். விளைபொருள் ஆர்வலர் குழுவின் செயல்பாடுகளை மேம்படுத்துவது மற்றும் வேளாண்

விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பதன் அவசியம், மானியத்திட்டங்கள், பயிர் சாகுபடி குறித்து விளக்கப்பட்டது. சிறுதொழில் பயிற்சியாளர் ராஜ்குமார், "அக்மார்க்' ஆய்வக வேளாண் அலுவலர் ரவி பேசினர். ஏற்பாடுகளை, வேளாண் வணிக அலுவலர் காயத்திரிதேவி, வேளாண் அலுவலர் சந்திரசேகரன், ஆத்மா திட்ட அலுவலர் பிரேமா மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் மோகன்காந்தி, மகேஷ்பாபு, ராமராஜ் செய்தனர்.

## ஆடிவெள்ளி, அமாவாசையை ஒட்டிபூ, காய்கறி விலை உயர்வு

நாகர்கோவில் :குமரி மாவட்டம் தோவாளையில் பெரிய பூ மார்க்கெட் உள்ளது. குமரி மாவட்டம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் இருந்து இங்கு பூக்கள் கொண்டு வரப்பட்டு ஏலமுறையில் விற்பனை செய்யப்படுகிறது.கேரள வியாபாரிகளும் இங்கு வந்து அதிகளவில் பூக்களை வாங்கிச் செல்வது வழக்கம். தற்போது தோவாளை மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைந்துள்ளது. அதே சமயம் நேற்றை விட இன்று பூக்கள் விலை உயர்ந்து விற்பனையானது. பிச்சிப்பூ 2 மடங்கு விலை உயர்ந்துள்ளது.ரூ.125-க்கு விற்ற பிச்சிப்பூ இன்று ரூ.250-க்கும், ரூ.80-க்கு விற்ற மல்லிப்பூ விலை குறைந்து ரூ.60-க்கும் விற்பனையானது. கேந்தி ரூ.80, வாடாமல்லி ரூ.60, சம்பங்கி ரூ.100, ஒரு தாமரை ரூ.1, கோழிக் கொண்டை ரூ.40, துளசி ரூ.25-க்கும் இன்று விற்பனையானது.இதைப்போல காய்கறிகள் விலையும் உயர்ந்து உள்ளது. நாகர்கோவிலில் உள்ள அப்டா மார்க்கெட்டுக்கு வழக்கமாக வரும் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளதால் காய்கறிகள் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.கேரட் ரூ.65, பீட்ரூட் ரூ.45, சேனை ரூ.40, பீன்ஸ் ரூ.70, மிளகாய் ரூ.70, முட்டைக்கோஸ் ரூ.25, உருளைக்கிழங்கு ரூ.34, கத்திரிக்காய் ரூ.35-ரூ.40, பல்லரி ரூ.35, வழுதலங்காய் ரூ.40, வெள்ளரிக்காய் ரூ.15, தடியங்காய் ரூ.25-க்கு விற்பனையானது.

## அணைகளில் நீர்மட்டம் சரிவு

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை கண்ணாமூச்சி காட்டி வருகிறது. ஜூன் மாதத்தில் இயல்பான மழை அளவைக் காட்டிலும் மிக குறைவான அளவே மழை பெய்தது.இந்த மாதமும் சராசரி மழை அளவை விட குறைவான அளவே மழை பெய்துள்ளது. இதனால் அணைகளுக்கு வரக்கூடிய

நீர்வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டமும் சரிந்து வருகின்றன.48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 20 அடி தண்ணீர் இருந்தது. ஆனால் இன்று அணையின் நீர்மட்டம் 10.35 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 431 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 616 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. பெருஞ்சாணி அணையில் இருந்து பாசனத்திற்காக கடந்த மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணை நீர் மட்டம் சரிந்து வருவதால் அணை மூடப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 35.05 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 73 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. சிற்றாறு-1 அணையின் நீர்மட்டம் 7.54 அடியாகவும், சிற்றாறு-2 அணையின் நீர்மட்டம் 7.64 அடியாகவும், பொய்கை அணையின் நீர் மட்டம் 3.30 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 45.60 அடியாக வும் உள்ளது. நாகர்கோவில் நகருக்கு தண்ணீர் விநியோகிக்கப்படும் முக்கடல் அணையின் நீர்மட்டம் மைனஸ் 17 அடியில் உள்ளது. நீர்மட்டம் சரிந்து வருவதால் நாகர்கோவில் நகருக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**<u>வெளிச்சந்தையில் காய்கறி விலை 'கிடுகிடு' உயர்வு பசுமை பண்ணை காய்கறி கடைகளை நோக்கி படையெடுக்கும் பொதுமக்கள்</u>**



தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து வருவதால் பசுமை பண்ணை அங்காடி மையங்களுக்கு பொதுமக்கள் படையெடுக்க தொடங்கியுள்ளனர்.

## காய்கறி பற்றாக்குறை

தமிழ்நாட்டுக்கு தேவையான காய்கறிகள் ஊட்டி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், பழனி, திண்டிவனம், ஆரணி ஆகிய பகுதிகளில் இருந்தும் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றன. இதில் தக்காளி, பீன்ஸ், பச்சை மிளகாய் ஆகிய காய்கறிகள் பெரும்பாலும் கர்நாடகாவில் இருந்து பெறப்பட்டு வந்தது. இந்த நிலையில் பீகார், ஒரிசா மாநிலங்களில் பருவமழை பொய்த்து போனதால் காய்கறிகளுக்கு அங்கு பற்றாக்குறை நிலவி வருகிறது. இதையடுத்து தக்காளி உள்பட காய்கறிகள் பெரும்பாலும் பீகார், ஒரிசா மாநிலங்களுக்கு தற்போது ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## தட்டுப்பாடு

இதனையடுத்து தமிழகத்தில் தக்காளி உள்பட காய்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் காய்கறியின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தக்காளியின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் (கோயம்பேடு மொத்த சந்தை விற்பனைப்படி) ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி நேற்று ரூ.55–க்கு விற்பனை செய்யப்பட்டது. சில்லரை விற்பனையாளர்களிடம் ரூ.60 முதல் 80 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## பசுமை பண்ணை அங்காடிகள்

இதனால் பெரும்பாலான ஓட்டல்களில் தக்காளி சட்னியை தயார் செய்வதில் தயக்கம் காட்டிவருகிறார்கள். சில ஓட்டல்களில் ''தக்காளியின் விலையை கருத்தில் கொண்டு தக்காளி சட்னி கொடுப்பதில்லை'' என்ற வாசகங்கள் அடங்கிய போர்டுகள் வைக்கப்பட்டு உள்ளன. இதனால் காய்கறி சந்தைக்கு சென்று காய்கறிகளை வாங்குவதில் பொதுமக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இந்தநிலையில் பொதுமக்கள் பார்வை தற்போது தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் பசுமை பண்ணை காய்கறி நுகர்வோர் அங்காடிகளின் மேல் விழுந்துள்ளது. காய்கறிகள் குறைவான விலையிலும், தரமாகவும் கிடைப்பதால் மக்கள் தற்போது இந்த மையங்களுக்கு செல்கின்றனர்.

## நல்ல வரவேற்பு

தமிழகத்தில் மொத்தம் 52 பசுமை பண்ணை காய்கறி நுகர்வோர் அங்காடிகள் உள்ளன. இதில் சென்னையில் மட்டும் 40 மையங்கள் இருக்கின்றன. இந்த மையங்களில் தினமும் காலையில் அன்றைய தினத்திற்கான விலைப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றன. தினமும் 3 லாரிகளில் காய்கறிகள் எடுத்து வரப்படுகின்றன. இதுகுறித்து சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பசுமை பண்ணை காய்கறி நுகர்வோர் அங்காடியின் பொது மேலாளர் ந.வில்வசேகரன் கூறுகையில், ''இந்த மையத்தில் ஆரம்பத்தில் 2 லாரிகளில் மூலம் 20 டன் அளவு காய்கறி இறக்குமதி செய்துவந்தோம். ஆனால் வெளிச்சந்தைகளில் தற்போது காய்கறிகளின் விலை கூடுதலாக இருப்பதால் பொதுமக்கள் பசுமை பண்ணை கடைகளை தேடி வரத்தொடங்கியுள்ளனர். எனவே பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு தற்போது கூடுதலாக ஒரு லாரி மூலம் 10 டன் அளவுள்ள காய்கறிகள் இறக்குமதி செய்யப்படுகிறது. நடுத்தர மக்களை மையமாக கொண்டு விலை நிர்ணயிக்கப்படுவதாலும், முந்தைய தினம் பறித்த காய்கறிகளே அடுத்த நாள் விற்பனை செய்யப்படுவதாலும் இந்த மையங்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது'', என்றார்.

## விலை உயர்வு?

காய்கறிகளின் திடீர் விலையேற்றம் குறித்து கோயம்பேடு காய்கறி மார்க்கெட் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறும்போது, ''தமிழ்நாட்டில் காய்கறிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் தக்காளி, பீன்ஸ் போன்ற காய்கறிகள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இந்த நிலை இன்னும் 1 மாதத்திற்கு நீடிக்க வாய்ப்புள்ளது. எனவே தக்காளி உள்பட காய்கறிகளின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே இருக்கலாம். வெளிச்சந்தைகளில் இந்த காய்கறிகள் அதிக விலைக்கு விற்க வாய்ப்பு ஏற்படும்'', என்றார்.

## வேளாண்மை விரிவாக்க மையத்தை அரியலூர் கலெக்டர் ஆய்வு

**திருமானூர்,**
ஏலாக்குறிச்சியில் உள்ள துணை வேளா ண்மை விரிவாக்க மையத்தை கலெக்டர் சரவணவேல்ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர் ஆய்வு

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், திருமானூர் வட்டாரத்தில் உள்ள ஏலாக்குறிச்சி துணை வேளா ண்மை விரிவாக்க மையத்தை செயல்பட செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கலெக் டரிடம் கோரிக்கை வைத் தனர். இதைத் தொடர்ந்து கலெக் டர் சரவணவேல்ராஜ் ஏலாக் குறிச்சியில் உள்ள

துணை வேளாண்மை விரிவாக்க மையத்தை நேரில் பார்வை யிட்டு திடீர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் தெரிவித்த தாவது:-

விதைகள் இருப்பு

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறை மூலம் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 6 வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் கீழப் பழூவூர், ஏலாக்குறிச்சி, மீன் சுருட்டி மற்றும் விக்கிரமங்கலம் ஆகிய இடங்களில் மொத்தம் 4 துணை வேளாண்மை விரி வாக்க மையங்கள் செயல் பட்டு வருகின்றன. வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் வேளாண் இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதில் ராபிபருவத்திற்கு தேவையான விதைகள் 210 டன் நெல் விதை, 4.2 டன் பயறு வகைள் மற்றும் 21.15 டன் நிலக்கடலை ஆகிய விதைகள் இருப்பு வைக்கப் பட்டு விநியோகம் செய்யப் பட்டு வருகின்றது.

இடுபொருட்கள்

மேலும், பயிர் பாதுகாப்புக் கருவிகள், உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் நுண்ணூட்டங்கள் போதிய அளவு இருப்பில் வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அரியலூர் மாவட் டத்தில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களுக்கும் தேவையான வேளாண் இடு பொருட்கள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இரு ப்பு வைக்கப்பட்டு பின்னர் விநியோகம் செய்யப்படுகின்றது. எனவே அரியலூர் மாவட் டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தங்களுக்கு அருகாமையில் உள்ள வேளா ண்மை விரிவாக்க மைய த்தையோ அல்லது துணை வேளாண் விரிவாக்க மைய த்தையோ அணுகி தங்களுக்கு தேவையான வேளாண் இடு பொருட்களை வாங்கி பயன் பெற வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித் தார்.

## <u>மேட்டூர் அணைக்கு இந்த ஆண்டு நீர்வரத்து குறைவு சம்பா சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்குமா?</u>

பருவமழை தீவிரம் அடையாததால் மேட்டூர் அணைக்கு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நீர்வரத்து வெகுவாக குறைந்து விட்டது. இதனால் சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் கிடைக்குமா? என்று டெல்டா பாசன விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தமிழகத்தில் பெய்யாத நிலையில் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் பரவலாக பெய்து வருகிறது. இதனால் கர்நாடகாவில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட முக்கிய அணைகளுக்கு கடந்த 20 நாட்களாக நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக இந்த அணைகள் அதன் முழுகொள்ளளவை எட்டிப்பிடிக்கும் நிலையில் உள்ளன.

இதையடுத்து பாதுகாப்பு கருதி கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு வரும் தண்ணீர் அப்படியே காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது. இவ்வாறு திறந்து விடப்படும் தண்ணீர் தமிழக- கர்நாடக எல்லை பகுதியான பிலிகுண்டுலுவை கடந்த ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணையை வந்தடைகிறது. தீவிரம் அடையவில்லை அதாவது, கடந்த 18-ந் தேதி அதிகாலை முதல் மேட்டூர் அணைக்கு கர்நாடக அணைகளில் திறந்து விடப்பட்ட தண்ணீர் வரத்தொடங்கியது. இதன் காரணமாக அன்று 47 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து நேற்று 64 அடியாக உயர்ந்தது. அப்போது அணைக்கு வினாடிக்கு 28,961 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் கர்நாடகத்திலும், கேரளாவிலும் சென்ற ஆண்டு பருவமழை தீவிரம் அடைந்ததைபோன்று இந்த ஆண்டு தீவிரம் அடையவில்லை. ஏனெனில், கடந்த 2013-ம் ஆண்டு ஜூன் மாதம் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 15 அடியாக இருந்தது. இந்த நிலையில் கர்நாடகத்திலும், கேரளாவிலும் வரலாறு காணாத அளவிற்கு பருவமழை பெய்தது. இதனால் கர்நாடக அணைகளில் இருந்து 1 லட்சம் கனஅடிக்கும்மேல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவ்வாறு திறக்கப்பட்ட தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடைந்ததின் காரணமாக 15 அடியாக இருந்த நீர்மட்டம் சுமார் 40 தினங்களில் மளமளவென உயர்ந்து தன் முழுகொள்ளளவான 120 அடியை ஆகஸ்டு 4-ந் தேதி எட்டி நிரம்பியது.

நீர்வரத்து குறைவு

ஆனால், இந்த ஆண்டு கடந்த ஆண்டைபோல் கர்நாடகத்தில் மழை தீவிரம் அடையாததால் அங்குள்ள அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு கடந்த ஆண்டை ஒப்பிட்டு பார்க்கும்போது வெகுவாக குறைந்தே உள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டமும் தற்போது குறைவாகவே உள்ளது. மழை மேலும் தீவிரம் அடைந்தால் மட்டுமே அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் வேகமாக உயரும். இவ்வாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்தால் மட்டுமே டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்க சாத்தியக்கூறுகள் ஏற்படும். தற்போது ஜூலை மாதம் முடியும் தருவாயில் உள்ளதால் இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை கைகொடுக்கவில்லை. ஆகவே, சம்பா சாகுபடிக்காவது மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுமா? என்ற ஏக்கத்தில் டெல்டா பாசன விவசாயிகள் காத்திருக்கிறார்கள்.

**மருத்துவ குணம் கொண்ட நாவல் பழம் விளைச்சல் அதிகரிப்பு**



கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டத்தில் மருத்துவ குணம் கொண்ட நாவல் பழம் விளைச்சல் அதிகரித்துள்ளது.

விலை அதிகரிப்பு

புராண காலத்திலிருந்தே நாவல் பழத்திற்கு உரிய பெருமை உண்டு. இந்த நாவல் மரங்கள் காவிரி படுகை பகுதியில் அதிக அளவில் காணப்படுகிறது. ஆனி, ஆடி மாதங்களில் மட்டும் விளைச்சல் கொடுக்கும் இந்த நாவல் பழம் துவர்ப்பு கலந்த இனிப்பு சுவையாக இருக்கும். இந்த நாவல்பழம் பொதுவாக விலை மலிவாக கிடைக்கும். ஆனால் தற்போது போதிய மழை பெய்யாததாலும், காவிரியில் தண்ணீர் வராததாலும், ஒரு படி ரூ.20-க்கு விற்பனையான நாவல் பழம், தற்போது ஒரு படி ரூ.80-க்கு விற்பனை ஆகிறது. நாட்டு நாவல் பழத்திற்கு போட்டியாக ஆந்திராவில் இருந்து நாவல் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

மருத்துவ குணம்

நாவல் பழத்தில் உள்ள மருத்துவ பயன்கள் குறித்து பஞ்சப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவர் சுரேஷ்குமார் கூறுகையில், நாவல் பழத்தை தொடர்ந்து சாப்பிடுவதால், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். என்றார்.

அதிக விளைச்சல்

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த நாவல் பழங்கள் கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், அரங்கநாதன்பேட்டை, நெரூர், மாயனூர், கிருஷ்ணராயபுரம், வளையர்பாளையம், லாலாப்பேட்டை, திம்மாச்சிபுரம், குளித்தலை ஆகிய பகுதிகளில் அதிக அளவில் விளைச்சல் ஆகிறது. ஆடி மாதம் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும். எனவே மரத்தில் இருந்து நாவல் பழங்கள் கீழே கொட்டி விடும். இதனால் விவசாயிகள் கொசுவலையை மரத்திற்கு கீழே தரையில் இருந்து 2 அடி உயரத்தில் கட்டி நாவல் பழங்கள் மண்ணில் விழாமல் சேகரித்து விற்று வருகிறார்கள்.

## <u>2 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.42 லட்சத்துக்கு ஏலம்</u>



நாமக்கல்லில் 2 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.42 லட்சத்துக்கு ஏலம் போனது. பருத்தி ஏலம் நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப் பேட்டை, ராசிபுரம், பவித்தி ரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட் டங்களில் இருந்தும் விவசாயி கள் 2 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.42 லட்சத்துக்கு ஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ரூ.42 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 800 முதல் ரூ.5 ஆயிரத்து 299 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 900 முதல் ரூ.7 ஆயிரத்து 599 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**<u>42 ஜவ்வரிசி ஆலைகளில் கண்காணிப்புக்குழு ஆய்வு</u>**



ஜவ்வரிசி ஆலை ஒன்றில் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் தமிழ்செல்வன் தலைமையிலான கண்காணிப்புக்குழுவினர் ஆய்வு செய்தபோது எடுத்தபடம்.

நாமக்கல் அருகே 42 ஜவ்வரிசி ஆலைகளில் கண்காணிப்புக் குழுவினர் விடிய, விடிய ஆய்வு மேற் கொண்டனர். ரசாயன கலப்படம் செய்தால் கடும் நடிவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கள் கூறினர்.

ரசாயன கலப்படம்

நாமக்கல் தாலுகா செல்லப் பம்பட்டி சுற்றுவட்டார பகுதி களில் உள்ள ஜவ்வரிசி ஆலை களில் கலெக்டரால் அமைக்கப் பட்ட கண்காணிப்புக்குழுவின் தொடர் ஆய்வின் மூலம் ஜவ் வரிசி தயாரிப்பில் மக்காச் சோளமாவு கலப்படம் முழு வதும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. இந்நிலையில் ஜவ்வரிசி உற் பத்தியில் ரசாயனக் கலப்படம் நடைபெறுவதாக கலெக்ட ருக்கு வந்த புகாரின் அடிப் படையில், அவரது உத்தரவுப் படி செல்லப்பம்பட்டியில் நடை பெற்ற ஜவ்வரிசி உற்பத்தி யாளர்களுக்கான விழிப்பு ணர்வு கூட்டத்தில் ஜவ்வரிசி தயாரிப்பில் ரசாயனக் கலப் படம் செய்யக்கூடாது எனவும், அதற்கு பயன்படுத்தப் படும் 'பிரஷர்' மோட்டார் பம்பு களை முழுமையாக அப்புறப் படுத்தி இயற்கையான முறை யில் ஜவ்வரிசி தயாரிக்க வேண்டும் எனவும் அறி வுறுத்தப்பட்டது.

அதிகாரிகள் ஆய்வு

அதன் பின்னரும் இரவு நேரங்களில் ரசாயனக் கலப் படத்திற்காக பிரஷர் மோட் டார் பம்புகளை பயன்படுத்து வதாக கிடைத்த தகவலின் அடிப்படை யில் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, நியமன அலு வலர் டாக்டர் தமிழ்ச்செல்வன் தலைமையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டுவாரிய உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் பழனிச்சாமி மற்றும் உதவி பொறியாளர் ரங்கராஜ், உணவு பாதுகாப்பு அலுவலர் கள் சிவநேசன், நரசிம்மன், ராமசாமி, ராமச் சந்திரன் மற்றும் தோட்டக்கலை துறை, வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புகுழு கலெக்டர் தட்சிணாமூர்த்தி உத்தரவின் பேரில், செல்லப்பம் பட்டி சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள 42 ஜவ்வரிசி தொழிற்சாலை களில் விடிய,

விடிய ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வில் பெரும்பா லான ஜவ்வரிசி ஆலைகளில் 'பிரஷர்' மோட்டார் பம்புகள் நீக்கப் பட்டு, இயற்கையான முறை யில் ஜவ்வரிசி தயாரிப்பு நடைபெறுவதை இக்குழு உறுதி செய்தது. மொத்தம் உள்ள 42 ஜவ்வரிசி தொழிற் சாலைகளில் 16 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் சீசன் முடிந்து, தற்போதுதான் இயங்க தொடங்கி உள்ளன. எனவே அதில் உணவு மாதிரி கள் எதுவும் இல்லை. 12 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் இன்னும் முழுமையாக இயங்கவில்லை. எனவே ஏற்கனவே இயக்கத்தில் உள்ள 14 ஜவ்வரிசி ஆலைகளில் உணவு மாதிரி சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்காக உணவுப் பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாகவும், உணவுப்பகுப் பாய்வு கூடத்தின் உணவுப் பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் உணவுப்பாது காப்பு சட்டத்தின்படி கடுமை யான நடவடிக்கை எடுக்கப் படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆலையை மூட உத்தரவு

மேலும், 'பிரஷர்' மோட்டார் பம்பு ஒரு ஜவ்வரிசி தொழிற் சாலையில் பயன்பாட்டில் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டு, பறிமுதல் செய்யப்பட் டது. அந்த ஆலையை உடனடி யாக மூட அதிகாரிகள் உத்தர விட்டனர். மேலும், கண்காணிப்பு குழு வின் இரவு நேர ஆய்வு, மாவட் டம் முழுவதிலும் தொடர்ந்து நடைபெறும் எனவும், இதை பொருட்படுத்தாமல் தவறு செய்யும் ஜவ்வரிசி ஆலை நிர்வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ரசாயனக் கலப்படம் கண்டறியப்பட்டால் ஜவ்வரிசி ஆலை 'சீல்' வைத்து மூடப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர்.

## <u>வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டுகோள்</u>



**புதுக்கோட்டை**,

நேரடி நெல் விதைப்பில் வேளாண் தொழில் நுட்பங்களை பயன்படுத்த

விவசாயிகளுக்கு வேளாண்மை இணை இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
விவசாயிகள் பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் வட்டாரத்தில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பாக கிராம அளவிலான வேளாண் பயிற்சி நடந்தது. பயிற்சியினை புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சாந்தி முன்னிலை வகித்தார். பயிற்சியில் வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜஹான் பேசும்போது, நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள் வேளாண் துறை பரிந்துரை செய்யும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திச் சாகுபடி செய்யவேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்து பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டினைப் பெருமளவு தவிர்க்க வேண்டும் என்றார். உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி பேசும்போது, விவசாயிகள் மண்பரிசோதனை செய்து அதன் முடிவுகளின்படி உரமிட வேண்டும். மேலும் விவசாயிகள் தண்ணீர் தேவை குறைவாக உள்ள பாரம்பரியப் பயிர்களான தினை, சாமை, வரகு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும் என்றார்.

படக்காட்சி
குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எஸ்.ராஜசேகரன், நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பங்களைக் குறிப்பாக தரமான விதைத்தேர்வு, விதை கடினப்படுத்துதல், விதை நேர்த்தி, உரமிடுதல், களை நிர்வாகம் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்துப் படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். குடுமியான்மலை ஸ்டாமின் இயக்குநர்(பொ) வெள்ளைச்சாமி, நேரடி நெல்விதைப்பில் சூடோமோனாஸ் இயற்கை உயிர் மருந்தினைக்கொண்டு விதைநேர்த்தி செய்தும் பயிருக்குத் தெளித்தும் குலைநோய் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்திட ஆலோசனை தெரிவித்தார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன் கலந்துகொண்டு விவசாயிகள் பாரம்பரிய வேளாண் பொருட்களான வரகு, தினை, சாமை போன்ற சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் இச்சிறுதானியங்களைப் பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் அடைக்கப்பன், ஆவுடையார்கோயில் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் மத்திய மாநில அரசு திட்டங்கள் குறித்தும் மானியத்தில் விநியோகிக்கப்படும் வேளாண் இடுபொருட்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

விதைநேர்த்தி தொழில்நுட்பங்கள்

பயிற்சியில் ரசாயன விதைநேர்த்தி, உயிர்உர மருந்து விதைநேர்த்தி தொழில்நுட்பங்களை செயல் விளக்கமாக விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர்கள் பொன்னையா, பெரியசாமி ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கத்தொகையும், தொழில்நுட்பக் கையேடுகளும் வழங்கப்பட்டன.

## விவசாய மோட்டார்களை சூரிய மின்சக்தியில் இயக்கலாம்

**சிவகங்கை**, விவசாய நிலத்தில் உள்ள கிணறு, ஆழ்துளை கிணறுகளில் உள்ள மோட்டார்களை சூரிய மின்சக்தி மூலம் இயக்கும் திட்டம் அரசின் மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

சோலார்

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளின் நிலங்களில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் சூரிய ஒளி மின்சக்தி மூலம் நீர் இறைக்க 5 குதிரை திறன் சக்தி கொண்ட சோலார் பி.வி. (குழாய்) பம்ப் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சிவகங்கை தாலுகா காளை யார்கோவில் ஒன்றியம், பாக னேரி வருவாய் கிராமத்தை சார்ந்த கூமாச்சிப்பட்டி கிராமத்தை சேர்ந்த சிவப் பிர காசம், என்ற விவசாயின் நிலத்தில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் சோலார் பி.வி. பம்ப் நிறுவப்பட்டுள்ளது. இதை கலெக்டர் ராஜாராமன் நேரில் சென்று பார்வையிட் டார். பின்னர் கலெக்டர்ராஜா ராமன் நிருபர்களிடம் கூறிய தாவது:- இந்த திட்டம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட் டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப் படுகிறது. இதற்காக இம் மாவட்டத்திற்கு 60 விவசாயி களின் நிலங்களில் சோலார் பி.வி. பம்புகள் நிறு விட இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, ரூ.2 கோடியே 56 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

மானியம்

இந்த திட்டத்தின் கீழ் சோலார்¢ பி.வி.பம்ப் அமைக்க ரூ4 லட்சத்து 39ஆயிரத்து 950 ஆகும். இதில் விவசாயி தனது பங்களிப்பாக ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 750 ஐ வங்கி வரை வாக நிறுவனத்தின் பெயரில் செலுத்த வேண்டும். அரசு ரூ. 3 லட்சத்து 35 ஆயிரத்து 200ஐ மானியமாக வழங்குகிறது. இந்த திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புபவர்கள் சிவ கங்கை கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளான் பொறியியல் துறை செயற் பொறியாளர் அலுவல கத்தை தொடர்பு கொள்ள லாம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**6 நாளில் 16 அடி அதிகரிப்பு**

**மேட்டூர் நீர் மட்டம் 64 அடியை தாண்டியது**



**மேட்டூர்**: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 6 நாட்களில் 16 அடி உயர்ந்து 64 அடியை தாண்டிய நிலையில், நீர்வரத்து வினாடிக்கு 28,961 கனஅடியாக அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் கர்நாடகத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளின் பாதுகாப்பு கருதி உபரி நீர் திறக்கப்பட்டு மேட்டூர் அணைக¢கு வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த 18ம் தேதி 47.94 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 64.02 அடியாக உயர்ந்துள்ளது. கடந்த 6 நாட்களில் அணையின் நீர்மட்டம் 16.08 அடி உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 28,417 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை வினாடிக¢கு 28,961 கனஅடியாக அதிகரித்தது. குடிநீர் தேவைக¢கு வினாடிக்கு 800 கனஅடிவீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. நீர் இருப்பு 27.77 டி.எம்.சியாக உள்ளது.

**விலை உயர்வை தடுக்க**

**வெளிச்சந்தையில் 1 கோடி டன் கோதுமை விற்பனை: மத்திய அரசு அனுமதி**



**புதுடெல்லி**: வெளிச்சந்தையில் கோதுமை விலை அதிகரித்துள்ளது. இந்த விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்புகளில் இருந்து மத்திய அரசுக்கு கோரிக்கைகள் வந்தன. இவற்றை கருத்தில் கொண்டு உள்நாட்டில் கோதுமை புழக்கத்தை அதிகரித்து அதன் மூலம் விலையை குறைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி, வெளிமார்க்கெட்டில், ஒரு கோடி டன் கோதுமையை விற்பனை செய்ய மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சர்கள் குழு அனுமதி வழங்கியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று டெல்லியில் கூடிய இந்த குழு கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. வெளிச்சந்தையில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,500க்கு விற்கவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலையைத் தவிர சரக்கு போக்குவரத்துக்கான கட்டணம் தனியாக வசூலிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஆடி மாதம் எதிரொலி

## முட்டை விலை 280 காசுகளாக நிர்ணயம்



**நாமக்கல்**: ஆடி மாதத்தை முன்னிட்டு முட்டை விலை 10 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஒரு முட்டை 280 காசுகளாக நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில், ‘தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு’ கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு, முட்டை உற்பத்தி மற்றும் விற்பனை நிலவரம் குறித்து விவாதித்தனர். ஒரு முட்டையின் பண்ணைக்கொள்முதல் விலை 290 காசில் இருந்து 10 காசு குறைக்கப்பட்டு 280 காசுகளாக நிர்ணயம் செய்து கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. கடந்த 1ம் தேதி நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 363 காசாக இருந்தது. வடமாநிலங்களில் ஸ்வராண் பண்டிகையால் முட்டை விற்பனையில் மந்த நிலை ஏற்பட்டது. இதனால், அனைத்து மண்டலத்திலும் முட்டை விலை குறைந்தது. தமிழகத்தில் தற்போது ஆடி மாதம் என்பதால், பெரும்பாலான ஊர்களில் திருவிழா நடந்து வருகிறது. மேலும், ரம்ஜான் நோன்பு இருப்பதால், முட்டை விற்பனை குறைந்துள்ளது. இதனால் முட்டை விலை தொடர்ந்து குறைக்கப்பட்டு வருவதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கறிக்கோழி ரூ.84க்கு விற்பனை: ஒரு கிலோ முட்டைக்கோழி 55 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.84 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இடைத்தரகர்கள் இன்றி சின்னவெங்காயம் ஏலம் விவசாயிகள் குவிந்தனர்

**திருச்சி**, : இந்த வாரம் 2 மடங்கானதால் 3,982 கிலோ சின்ன வெங் காயம் ஏலம் போனது. விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. திருச்சி மாவட்டம் துறையூர், தா.பேட்டை, உப்பிலியபுரம் வட்டாரங்களில் சின்ன வெங்காயம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இடைத்தரார்கள் மூலம் சின்ன வெங்காயத்தை விற்று வந்த தால் விலை கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்பட்ட னர்.விவசாயிகளின் கோரி க்கையை ஏற்று, துறையூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் சின்ன வெங்காய ஏலம் கடந்தவாரம் புதன்கிழமை துவங்கியது. இதில், விவசாயிகள் ஏராளமா னோர் சின்ன வெங்காய மூட்டைகளுடன், ஏலத்தை எடுக்க வியாபாரிகளும் குவிந்தனர். இதில் முதல் நாள் நடந்த ஏலத்தில் 1,352 கிலோ வெங்காயம் ஏலம் போனது. தரமான வெங் காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.16க்கும், சராசரியாக கிலோ ரூ.13க்கும் ஏலம் போனது. எந்தவித கமிஷனின்றி விவசாயிகளு க்கு பணமும் உடனே பட்டு வாடா செய்யப்பட்டது. இந்நிலையில் விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த வாரம் திங்கள்கிழமை சின்ன வெங்காயம் ஏலம் நடந்தது. இதில் 2வது நாள் என்பதால் கடந்த வாரத்தை விட இந்த வாரம் 2 மடங்கானது. இதில் 57

மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இதில் முதல் நாள் ஏலத்தில் 5 விவசாயி கள், 4 வியாபாரிகள் மட் டுமே கலந்து கொண்டனர். ஆனால் இந்த வாரம் 13 விவசாயிகள், 7 வியாபாரி கள் பங்கேற்றனர். மொத் தம் 3,982 கிலோ மூட்டை சின்ன வெங்காயம் ஏலம் போனது. தரமான வெங் காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.22 க்கும், சராசரியாக கிலோ ரூ.18க் கும் ஏலம் போனது. இதில் இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் உடனுக்குடன் பணமும் பட்டு வாடா செய்யப்பட்டது. அடுத்தவாரம் முதல் வழக் கம் போல் புதன்கிழமை தோறும் சின்னவெங்காயம் ஏலம் நடைபெற உள்ளது.

## <u>தக்காளியில் இருந்து மதிப்பூட்டிய பொருள் தயாரிப்பு பயிற்சி</u>

**நீடாமங்கலம்**,:நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் தக்காளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பதற்கான செயல்முறை விளக்க பயிற்சி நிலைய தலைவர் சோழன் தலைமையில் நடந்தது. திட்ட உதவியாளர் ரேகா தக்காளியிலிருந்து சூப், கெச்சப், சாஸ், தக்காளி ஊறுக்காய் போன்றவை தயாரிப்பது குறித்து செயல் விளக்கங்களை செய்து காண்பித்து அவற்றை எவ்வாறு நீண்ட நாட்கள் சேமித்து வைப்பது என்ற ஆலோசனையும் வழங்கினார். பயிற்சியில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>பூதலூர் வட்டார விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கல்</u>

**திருக்காட்டுப்பள்ளி**, : பூதலூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தமிழக முதல்வரின் குறுவை தொகுப்பு திட்ட இடுபொருட்களாக ஏக்கருக்கு நெல் நுண்ணூட்டம் 5 கிலோ, சிங்க்சல்பேட் 10 கிலோ, ஜிப்சம் 200 கிலோ மற்றும் உயிர் உரங்கள் 8 பாக்கெட் வீதம் 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதை தஞ்சாவூர் வேளாண்மை இணை இயக்குனர் சேகர் ஆய்வு செய்து விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கினார். குறுவை தொகுப்பு திட்ட இடுபொருட்கள் வினியோகம் செய்து முடிக்கும் தருவாயில் உள்ளதால் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை அணுகி பதிவேட்டில் பதிவுசெய்து இடுபொருட்களை பெற்று கொள்ளலாம். இவ்வாறு பூதலூர் வேளாண்மை உதவி இயக்குனர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## <u>நெல்லையில் வேளாண்மை அலுவலர்கள் புத்தூட்ட பயிற்சி</u>

**நெல்லை**, : நெல்லையில் உரம், பூச்சி மருந்துகளுக்கான தரக் கட்டுப்பாடு குறித்து வேளாண்மை அலுவலர்களுக்கு புத்தூட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் வட்டாரங்களில் பணிபுரியும் வேளாண்மை அலுவலர்களுக்கு உரம், பூச்சி மருந்துகளுக்கான தரக் கட்டுப்பாடு தொடர்பான புத் தூட்டப் பயிற்சி நெல்லை வேளாண்மை இணைஇயக் குநர் அலுவலகத்தில் நடந் தது. இணை இயக்குநர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். அவர் பேசுகை யில் வேளாண்மை அலுவலர்கள் தரக் கட்டுப்பாட்டு பணியை செம்மையாக செய்ய வேண்டும். உரக் கடைகளில் உரங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்போது உரிய பட்டி யல் வழங்கப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றார். விருதுநகர் வேளாண்மை உதவிஇயக்கு நர் விவேகானந்தன், தூத்துக்குடி விதைச்சா¢றுஅலுவ லர் சிவகுமார், கோவில்பட்டி உரக்கட்டுப்பாடு ஆய்வக வேளாண்மை அலுவலர் மோகன், வேளாண்மை விற்பனைக் குழு விஜயகுமார், ஸ்பிக் உர நிறுவன மேலா ளர் சந்திரசேகரன், கோரமண்டல் பெர்டிலைசர்ஸ் நிறுவனம் ராமமூர்த்தி ஆகி யோர் பேசினர்.

முன்னதாக உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) கஜேந்திரபாண்டியன் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் (தரக் கட்டுப் பாடு) கற்பகராஜ்குமார் நன்றி கூறினார்.